ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2088/58 - 2018 සැප්තැම්බර් මස 14 වැනි සිකුරාදා - 2018.09.14

*2087/58 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(*அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது*)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***4 ஆம் திருத்தம்***

இலங்கை நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு

*இலக்கம் 1842/ 2 மற்றும் 2013, திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மற்றும் 2015, யூலை மாதம் 16 ஆந் திகதிய இலக்கம் 1923/ 47 ஐக் கொண்ட, 2016.08.11 ஆந் திகதிய இலக்கம் 1979/ 33 ஐக் கொண்ட மற்றும் 2018.08.30 ஆந் திகதிய இலக்கம் 2086/ 22 ஐக் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் திருத்தியமைக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வருமாறு திருத்தியமைக்கப்படல் வேண்டும்.*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,*

சி. பீ. டபிள்யூ. குணதிலக,<br>
செயலாளர், (பதில் கடமை),<br>
அரசாங்க சேவை ஆணைக்குழு.

*2018, செத்தெம்பர் 06.*

**“ஆ” பின்னிணைப்பு**

இலங்கை நிர்வாக சேவையின் மூன்றாம் (III) தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படும் திறந்த எழுத்து மூலப் போட்டிப் பரீட்சைக்கான பாடத்திட்டம்

1. இப்பரீட்சை கீழே குறிப்பிடப்பட்ட ஐந்து (05) வினாத்தாள்களைக் கொண்டதாகும்.

(i) பொது விவேகம்<br>
(ii) இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியும் போக்குகளும் ;<br>
(iii) உலகளாவிய போக்குகள் ;<br>
(iv) முகாமைத்துவ உளச்சார்பு ;<br>
(v) ஆக்கபூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்கள்.

1A - G 28525 — 10 (2018/09)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. பாடத்திட்டம் :

(i) பொது விவேகம் :

எண்கள், மொழிசார் மற்றும் உருவ வடிவங்கள், இடைத் தொடர்புகளுடன் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் தொடர்பிலான பகுப்பாய்வுத் திறமை, தர்க்க ரீதியான விளக்கம், பொருள் கோடல் ஆற்றல், ஏனைய நிலைமைகளுக்கு ஏற்புடையதாக ஆக்கிக் கொள்ளும் ஆற்றல் மற்றும் முடிபுகளுக்கு வருதல் தொடர்பாக பரீட்சார்த்திக்கு உள்ள புத்திக்கூர்மையை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

(காலம் 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள். இவ்வினாத்தாள் 4 தேர்வுகளுடன் கூடிய பல்தேர்வு வினாக்களைக் கொண்டதாகும்.)

(ii) இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியும் போக்குகளும் :

இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைகள் பற்றிய விடய அறிவு அல்லது பரீட்சார்த்திக்கு முன்வைக்கப்படுகின்ற சிக்கல்களுடன் தொடர்புடையதாக ஆக்கபூர்வமாக, பகுப்பாய்வு ரீதியாக மற்றும் விமர்சன ரீதியான சிந்திக்கும் ஆற்றல், முந்துரிமை பற்றித் தீர்மானிக்கும் ஆற்றல் மற்றும் உபாயமார்க்க ரீதியாக எதிர்காலத்தை எதிர்வு கூறக்கூடிய ஆற்றல் சம்பந்தமாக பரீட்சார்த்தி கொண்டுள்ள திறமைகளை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

(காலம் 2 மணித்தியாலம் - 100 புள்ளிகள். இவ்வினாத்தாள் 4 தேர்வுகளுடன் கூடிய பல்தேர்வு வினாக்களைக் மற்றும் கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாக்களைக் கொண்டதாகும்.)

(iii) உலகளாவிய போக்குகள்:

உலகளாவிய சமூக, பொருளாதார, அரசியல், கலாசார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலைகள் பற்றிய விடய அறிவு அல்லது பரீட்சார்த்திக்கு முன்வைக்கப்படுகின்ற சிக்கல்களுடன் தொடர்புடையதாக ஆக்கபூர்வமாக, பகுப்பாய்வு ரீதியாக மற்றும் விமர்சன ரீதியான சிந்திக்கும் ஆற்றல், முந்துரிமை பற்றித் தீர்மானிக்கும் ஆற்றல் மற்றும் உபாயமார்க்க ரீதியாக எதிர்காலத்தை எதிர்வு கூறக்கூடிய ஆற்றல் சம்பந்தமாக பரீட்சார்த்தி கொண்டுள்ள திறமைகளை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

(காலம் 2 மணித்தியாலம் - 100 புள்ளிகள். இவ்வினாத்தாள் 4 தேர்வுகளுடன் கூடிய பல்தேர்வு வினாக்களைக் மற்றும் கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாக்களைக் கொண்டதாகும்.)

(iv) முகாமைத்துவ உளச்சார்பு:

சிக்கல்கள் மற்றும் அவற்றுக்கான காரணங்களை இனங்காணல், தீர்மானம் மேற்கொள்ளல், நபர்களுக்கிடையிலான தொடர்புகளை நடாத்திச் செல்லுதல், தொடர்பாடல் திறமை, சுய ஒழுக்கக் கொள்கை மற்றும் உபாய முறைகளை தயாரித்தல், மனவெழுச்சிசார் நுண்மதி எனும் வகையில் பரீட்சார்த்தியிடம் முன்வைக்கப்படுகின்ற சம்பவங்கள் மற்றும் சந்தர்ப்பங்களை ஆதாரமாகக் கொண்டு பரீட்சார்த்தியிடமுள்ள திறமைகளை அளவிடுவது இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

(காலம் 2 மணித்தியாலம் - 100 புள்ளிகள். இவ்வினாத்தாள் 4 தேர்வுகளுடன் கூடிய பல்தேர்வு வினாக்கள், சுருக்க வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட கட்டுரை வினாக்களைக் கொண்டதாகும்.)

(v) ஆக்கபூர்வமான, பகுப்பாய்வு ரீதியான மற்றும் தொடர்பாடல் திறன்கள் :

தரப்பட்ட தலையங்கங்கள்/ தொனிப் பொருள்கள் பலவற்றிலிருந்து பரீட்சார்த்தி தானாகவே தெரிவு செய்யும் தலையங்கங்கள்/தொனிப் பொருள்கள் ஊடாக கருத்துக்களையும் தகவல்களையும் பகுப்பாய்தல், தொகுத்தல் மற்றும் சமர்ப்பித்தல் தொடர்பில் பரீட்சார்த்தி காட்டுகின்ற தர்க்க ரீதியான மற்றும் சிந்தனை சக்தியை அளவிடுதலும்

ஓரளவு சிக்கலான பந்தியொன்றை, எழுத்தாவணம் அல்லது நிருபமொன்றை ஊகித்துணர்ந்து கொள்ளவும் அதன் முக்கிய கருத்துக்களைத் தனது சொல்லில் சுருக்கி சரியாகவும் தெளிவாகவும் தெரிவிப்பதில் அவருக்குள்ள ஆற்றலை அளவிடுதலும் இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது. .

(காலம் : 3 மணித்தியாலம் - 100 புள்ளிகள். இவ்வினாத்தாள் கட்டுரை/ பகுதியளவு கட்டமைக்கப்பட்ட கட்டுரை அமைப்பிலான வினாக்களைக் கொண்டதாகும்.)

*09-807*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.